**Crl.M.P.No.242/2026**

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2026</u>**

**சாட்சி –1**

**பெயர் –பாலசங்கரன் (73) த/பெ. சுப்பையா, சீர்காழி**

**1.** கடந்த 2014 ஆம் வருடம் எனது நண்பரான மணி என்பவ்ர மூலம் மண்சூராபாத்தை சேர்ந்த பெருமாள் என்பவர் எனக்கு அறிமுகம் ஆனார். அவரிடம் 96 சென்ட் நிலம் இருந்தது. அதனை மனைகளாக பிரித்து விற்பனை செய்ய நானும் பெருமாள் என்பவரும் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம். ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர் மீதே மனைகளுக்கு உன்டான DTCP Approval ஐ பெற்றோம். முதலில் மேற்குறிப்பிட்ட DTCP Approval பெறாமல் சில மனைகளை விற்றுவிட்டோம். அதன் பின்னிட்டு மீதம் இருந்த 9 மனைகளை விற்க முற்பட்ட போது மேற்படி DTCP Approval பெற◌ாமல் மனைகளை விற்பனை செய்ய இயலாது என்ற சூழல் ஏற்பட்டது. அப்போது தேவனூாரை சேர்ந்த மணி மறறும் செட்டிதாங்களை சேர்ந்த சுப்பிரமணி ஆகியோர்கள் என்னை அனுகி மேற்குறிப்பிட்ட 9 மனைகளை அவர்களிடம் கொடுக்குமாறும் அதனை அவர்கள் ரூபாய்.48,89,500/– விற்பனை செய்து அந்த பணத்தை என்னிடம் தந்துவிடுவதாக கூறினார்கள். அதன் அடிப்படையில் அவர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்படி தொகையில் மனைகளை விற்று ரூபாய்.32,00,000/– பணத்தை என்னிடம் கொடுத்து விட்டார்கள். நிலுவை தொகையான ரூபாய்.16,89,500/– ஐ அவர்கள் எனக்கு கொடுக்கவில்லை. இது தொடர்பாக விழுப்புரம் மாவட்ட குற்ற பிரிவில் புகார் கொடுத்தேன். ஆனால் எதிரிகளின் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு உத்தரவிடுகிறேன்.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.